**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC. 144/2015.** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.5 மொக்கராஜ்** |
| **Fathers Name/Husband Name** | : | **முத்துக்காளை** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.12.2022

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

1) நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன அடைக்கலத்தை எனக்கு தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 09.00 மணியளவில் தொட்டப்பநாயக்கனூரில் உள்ள மில் அருகே சைக்கிளில் ரோட்டின் இடதுஓரமாக சென்றுகொண்டிருந்த அடைக்கலம் மீது உசிலம்பட்டியில் இருந்து ஆண்டிப்பட்டியை நோக்கி சென்ற இன்ஜினியரிங் காலேஜ் பேருந்து வேகமாக வந்து மோதியதில் சம்பவயிடத்திலேயே அடைக்கலம் இறந்துவிட்டார்.

2. நான் பக்கத்தில் தோட்டத்தில் இருந்தவன் ஓடிவந்து பார்த்தேன். அங்கே பேருந்து நின்றுகொண்டு இருந்தது. அடைக்கலத்தில் தலையில் பலத்த அடிபட்டு இருந்தது. அப்போது சம்பவயிடத்தில் கூட்டம் கூடிவிட்டது. நான் பேருந்து ஓட்டுநரை பார்க்கவில்லை. இறந்த அடைக்கலத்தை உசிலம்பட்டி அரசு

மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள். போலீசார் வழக்கு சம்பந்தமாக சம்பவயிடத்தில் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** விபத்தில ் இறந்த அடைக்கலத்தை எனக்கு விபத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் ரோட்டின் வடக்கு பக்கம் தான் நான் சொன்ன மில் உள்ளது என்றால் சரிதான். எனது தோட்டம் ரோட்டிற்கு தென்பக்கம் உள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் ஓடிவந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் பார்க்கும்போது விபத்து ஏற்பட்டு கீழே கிடந்தார் என்றால் சரிதான். பஸ்ஸின் எந்த பகுதி அடைக்கலம் மீது மோதியது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பேருந்து எவ்வளவு வேகமாக வந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. விபத்து நடந்த ரோட்டில் ் இருந்து எனது தோட்டம் சுமார் அரைக்கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் வந்து பார்க்கும் போது நிறைய ஆட்கள் கூடியிருந்தார்கள் என்றால் சரிதான். இறந்துபோன அடைக்கலம் தனியாக வந்தாரா அல்லது வேறுயாருடன் வந்தாரா என்று தெரியுமா என்றால் அவர் தனியாகத்தான் வந்தார், அவருக்கு முன்போ அல்லது பின்போ வேறு யாரும் வந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை.

S.d./ Mokkaraj

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.